# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

# OS.No. 77 /2024

dated : 23.07.2025

P.W.1

Name மாரித்துரை

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நான் 2019 ம் அன்று பொறியியல் பட்டம் படித்துள்ளேன். பொறியியல் துறையில் கட்டுமானப்பிரிவில் பட்டம் படித்துள்ளேன். தனியே நிறுவனம் நடத்தி வருகிறேன். இதுவரை 3 வீடுகள் கட்டிக் கொடுத்துள்ளேன். தற்போது வேறு ஒரு நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். லகரம் construction & Interior என்ற நிறுவனம் வைத்திருந்தேன். அந்த நிறுவனத்தை நான் பதிவு செய்யவில்லை. கட்டுமான ஒப்பந்தத்தில் ஈடுபடும் முன்பே அந்த வேலைக்கான தொகை நிர்ணயித்து அதனடிப்படையில் ஒப்பந்தத்தில் ஈடுபடுவோம் அதற்கான ஒப்பந்தத்தில் அனைத்து விவரங்களையும் குறிப்பிடுவோம். பொதுவாக ஒப்பந்தம் தயாரிக்கும்போது அந்த ஒப்பந்தத்தில் நான் ஒருதரப்பினராகவும், சேவை பெறுபவர் மற்றொரு தரப்பினராகவும் இருப்பார். அதில் சாட்சிகளிடமும் கையொப்பம் பெறுவோம். நான் 3 வீடுகள் கட்டிக் கொடுத்ததற்கும் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளேன். அந்த ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டதல்ல. பிரதிவாதியை தெரியும். அவரை சிறுவயதிலிருந்தே தெரியும் ஒரே

ஊர்க்காரர். அவராகவே என்னிடம் முதலில் வீட்டிற்கான வரைபடம் கேட்டார் பின்னர் கட்டுமான ஒப்பந்தத்தில் ஈடுபட்டார். பிரதிவாதியின் வீட்டில் வைத்துதான் ஒப்பந்தம் எழுதப்பட்டது. பிரதிவாதியும் அவரது தந்தையும், நானும் என் தந்தையும் இருந்தோம். அந்த ஒப்பந்தத்தை நான்தான் தயாரித்துக் கொண்டு வந்திருந்தேன். அந்த ஒப்பந்தத்திற்கான முத்திரைத்தாள் எந்த தேதியில் வாங்கப்பட்டது என்று ஞாபகமில்லை. நான் பத்திரம் வாங்கிய தேதியிலேயே ஒப்பந்தத்தை தயாரித்தோம். வா.சா.ஆ.1ல் 19.07.2022ல் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 20.07.2022ல் முத்திரைத்தாள் வாங்கப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தில் சாட்சியாக சௌந்தரராஜன் கையொப்பம் செய்துள்ளார். என்னுடைய தரப்பில் சாட்சியாக யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். ஒப்பந்தத்தில் முதல் பக்கம் தவிர மற்ற பக்கங்களில் எதிலும் கையொப்பம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு முன் தொகையாக ரூ. 9 லட்சத்திற்கு மேல் கொடுத்தார்கள் ஆனால் எவ்வளவு என்று குறிப்பிட்டு கூற இயலவில்லை. பணம் வாங்கும்போது நான் அதற்கு ஒப்புகை வழங்குவேன் கையொப்பம் செய்து கொடுப்பேன். ஒப்பந்தத்தின் இறுதியில் பணம் கொடுக்கும் விபரம் பற்றிய பட்டியல் உள்ளது. 22.07.2022 அன்று பணம் கொடுத்ததற்கான பதிவு மட்டும் உள்ளது என்றால் சரிதான். தனியாகவும் இரசீது கொடுத்துள்ளேன் அதற்கான ஆவணம் என் வசம் உள்ளது. ஒவ்வொரு முறை பணம் பெற்றுக் கொள்ளும்போதும் இரசீது கொடுப்பேன். அந்த இரசீதில் பிரதிவாதியிடம் கையொப்பம் பெற்றுக் கொள்வேன். அந்த

தொகையை ரொக்கமாகவும் கொடுப்பார் வங்கி கணக்கின் மூலமாகவும் கொடுப்பார். வங்கி கணக்கின் மூலம் எத்தனை லட்சம் பெற்றுக் கொண்டேன் என்று குறிப்பிட்டு ஞாபகமில்லை. என்னுடைய வங்கி கணக்கை பார்த்தால் குறிப்பாக கூற இயலும். என்னென்ன பொருட்கள் கட்டுமானத்திற்கு பயன்படுத்துவோம் என்று ஒப்பந்தத்தில் நான்தான் குறிப்பிட்டிருந்தேன் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தில் உள்ள பொருட்களை பொறியியல் படித்தவர்கள் தவிர வேறு யாராலும் புரிந்து கொள்ள முடியாது என்றால் சரியல்ல. நான் விளக்கமளித்துள்ளேன். பிரதிவாதியும் பொறியியல் பட்டம் படித்தவர் ஆவார். ஒப்பந்தத்தில் கட்டுமானத்திற்கான காலஅளவு குறிப்பிடவில்லை. 6 மாதத்திற்குள் முடித்து தருவதாக கூறியிருக்கிறேன். அவர் என்னிடம் எத்தனை நாட்களுக்குள் கட்டித் தரவேண்டுமென்று நிபந்தனை விதித்தாரா என்றால் இல்லை. கட்டுமானம் முடிந்து பெயிண்டிங் வேலை நடந்து கொண்டிருந்தபோதுதான் பிரச்சனை ஏற்பட்டது. பிரதிவாதியின் தந்தை என்னை அடித்தார். வேலை நடந்து கொண்டிருக்கும் இடத்தில் காலை சுமார் 10.30 மணியளவில் அடித்தார். பிப்ரவரி மாதம் அந்த சம்பவம் நடந்தது. நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. அதன்பின்னர் பிரதிவாதி மற்றும் அவரது தந்தை என்னை அழைத்து பேசினார். சமரச தரப்பினர்களும் அழைத்து பேசினார்கள். நான் ஒப்பந்தத்தில் கூறப்பட்ட பொருட்களை பயன்படுத்திதான் கட்டுமானத்தை கட்டினேன். தென்காசி குத்துக்கல் வலசை பொதிகை டிரேடர்ஸ் என்ற நிறுவனத்தில்தான் பொருட்களை வாங்கினேன். என் பெயரில்தான்

பொருட்களுக்கான பில்கள் வழங்கப்படும். எனக்கு என்ன பொருள் விற்கப்பட்டாலும் அதற்கு இரசீது பெற்றுவிடுவேன். எனக்கு வழங்கப்படும் பில்லில் எந்த ஒப்பந்தத்திற்கான பில் என்று அதில் அடையாளம் இருக்காது. பிரதிவாதிக்கு கூடுதலாக ஒரு அறை கட்டிக் கொடுத்தேன் அதற்கு தனியே ஒப்பந்தம் போடவில்லை. நான் பிரதிவாதிக்கு கட்டிக்கொடுத்தது தரைத்தளமும், முதல் தளமும் கொண்ட கட்டிடம் ஆகும். தரைத்தளத்திற்கு ஒரு சதுர அடிக்கு எவ்வளவு தொகை என்றும் முதல் தளத்தில் ஒரு சதுர அடிக்கு எவ்வளவு தொகை என்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு சதுர அடிக்கு ரூ.2000/- என்று பேசிக்கொண்டோம். பொதுவாக தரைத்தளத்திற்கு ஏற்படும் செலவும், முதல் தளத்திற்கு ஏற்படும் செலவும் மாறுபடும் என்றால் சரிதான். 1470 சதுர அடி தரைத்தளம் அமைந்துள்ளது. 740 சதுர அடி முதல் தளம் அமைந்துள்ளது. மொத்தமாக 2400 சதுர அடி கட்டப்பட்டுள்ளது. கூடுதலாக ஒரு அறை 150 சதுர அடியிலும் பால்கனி 200 சதுர அடியிலும் கட்டப்பட்டது. முதல் தளத்திலிருந்து மொட்டை மாடிக்கு செல்லும் படிக்கட்டு தனியே கட்டப்பட்டது. வீட்டிற்கு பின்புறம் சிமெண்ட் தளம் அமைக்கப்பட்டது கூடுதலாகும். 350 சதுர அடி படிக்கட்டும் கட்டப்பட்டது. 350 சதுர அடிக்கும் படிக்கட்டுக்கும் பின்னால் உள்ள தளத்திற்கும் சேர்த்து சுமார் ரூ.8,80,000/- என பேசினோம். நான் கூறிய அளவில் அந்த கட்டிடத்தை அளந்தால் தற்போதும் இருக்கும். வரவேற்பு அறையிலும், ஒரு படுக்கையறையிலும் பால்சீலிங் என் செலவில் அமைத்து தருவதாக கூறியிருந்தேன். நான் அவ்வாறு ஒப்புக்கொண்டபடி

பால்சீலிங் அமைக்கவில்லை என்றால் சரிதான். பிரச்சனை ஏற்பட்டதும் பிரதிவாதி பால்சீலிங் வேண்டாமென்று சொல்லிவிட்டார். பெயிண்ட் அடிக்கும் முன்பாகவே பால்சீலிங் அமைக்கப்பட வேண்டுமென்றால் சரிதான். அந்த வீட்டில் எத்தனை கதவு எத்தனை ஜன்னல்கள் என்று தெரியும். ஒரு நிலைக்கதவும் 4 படுக்கையறை கதவுகளும் போடப்பட வேண்டும். 4 படுக்கையறைகளுக்கும் 2 ஜன்னல்கள் வீதம் 8 ஜன்னல்களும், வரவேற்பறையில் 4 ஜன்னல்களும், பால்கனிக்கு வெளியே செல்ல இரண்டு கதவுகளும்போடப்பட்டது. சமையலறையில் ஒரு ஜன்னல் போடப்பட்டிருந்தது. மேற்கண்ட பொருட்களை எந்த கடையில் வாங்கப்பட்டது என்றால் மாரியப்பன் டிம்பர் டிப்போவில் எடுக்கப்பட்டது. அந்த பொருட்கள் வாங்கப்பட்டதற்கு பில்கள் என் பெயரில் வழங்கப்பட்டது. கடையில் எங்களுக்கு கமிஷன் தொகை கொடுக்கும் வழக்கம் உண்டு என்றால் சரியல்ல. பினோலக்ஸ் வயர் வாங்கி கொடுத்தேன். கோயம்புத்தூரில் உள்ள மம்தா எலக்ட்ரிக்கல்ஸ் என்ற கடையில் வாங்கினேன். கோயம்புத்தூரில் ஒரு கட்டுமான பணியை செய்து வந்தேன் அதனால் கோயம்புத்தூர் சென்றிருந்தபோது அங்கு வைத்து வாங்கினேன். என் மேல் புகார் கொடுக்கப்பட்டிருந்தது. நான் கட்டிடம் கட்டும்போதே புகார் கொடுக்கப்பட்டது. புகார் எப்போது கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. பெயிண்டிங் வேலை நடக்கும்போது புகார் கொடுக்கப்பட்டது. அதன்பின்னர் கட்டுமானத்தை முடித்துக் கொடுத்துவிட்டேன். கதவு மட்டும் பிரதிவாதி போட்டுக் கொண்டார். நான் கூறுவதுபோல் பிப்ரவரி மாதம் பிரச்சனை ஏற்பட்டபோது கட்டுமானத்தை பாதியில்

விட்டுவிட்டுச் சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிதான் கட்டுமானத்தை முழுமையாக முடித்தார் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.07.23 18:11:16 +0530